தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2021 கும்பம் (28-2-90) ஓர் உருபா (இதழ் எண்: 135)

ஆயிரம் அரசியல்காரர்களை உருவாக்கலாம்; ஒரு விடுதலை வீரனை உருவாக்குவது கடினம்! 2,000-ஆண்டுகளுக்குப் பின், தானே வளர்ந்தோங்கி நிற்பவன் பிரபாகரன்!

யாரும் அவனை முனைமழுக்க வேண்டாம்! காளைக்குக் கொம்பு சீவுவது போல, அனைவரும் ஊக்கப்படுத்த வேண்டும்!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

செய்திகள், உரைகள், செயல்கள்!

செய்தித்தாள்களின் முரண்பாடு!

அரசியல்காரர்களின் ஊழல்கள் எல்லாம் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் செய்தியாக வரும்போது, வாழ்நாள் முழுவதையும் ஈகம் செய்து, தேசத்துக்கு அறிவியல் அறிஞர்கள் (விஞ்ஞானிகள்) ஆற்றும் பணிகள் உரிய முகாமையைப் பெறுவதில்லையே! — தலைமையமைச்சர் வி. பி. சிங்.
கொச்சி—அறிவியல் மாநாட்டில் உரை. 4-2-90.

இராசீவின் பாதுகாப்பு!

இராசீவுக்கு மீண்டும் வலிவான பாதுகாப்பு தரப்பெற்றுள்ளது. தற்போது நடுவண் அமைச்சர் ஒவ்வொருவருக்கும் 13 பேர் பாதுகாப்பு அளிக்கின்றனர். இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவரான இராசீவுக்குப் பாதுகாப்பளிக்க 125 பேர் பணியாற்றுகின்றனர். குண்டு துளைக்க முடியாத 4 இயங்கிகளும், 5 பாதுகாப்பு இயங்கிகளும் அவருக்கு அளிக்கப் பெற்றுள்ளன. —செய்தி.

கேரளத்தில் அனைத்தும் மலையாள மொழியில்!

கேரள மாநிலத்தில் நகரங்கள், சிற்றூர்கள் அனைத்துப் பெயர்களும் மலையாள மொழியிலேயே அமைய வேண்டும் என கேரள அரசு முடிவு செய்துள்ளது. மலையாளம் தற்போது 31 அரசுத்துறைகளில் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டுள்ளது. அமைச்சரவைக் குறிப்புகள் ஏற்கனவே மலையாள மொழியிலேயே எழுதப் பெற்று வருகின்றன. சட்டங்கள் படிப்படியாக மலையாளத்திலேயே மொழி பெயர்க்கப்படுகின்றன. —செய்தி.

திராவிட இயக்கக் கல்லூரி!

திராவிட இயக்கத்தின் வரலாற்றையும், கொள்கைகளையும் இளைஞர்களுக்குப் பயிற்றுவிக்கும் பொருட்டு, சென்னையில் ஒரு கல்லூரியை நிறுவ வேண்டும் என்று தி.மு.க. மேலிடத்துக்கு, நடுவண் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் முரசொலி மாறன் திருச்சி தி. மு. க. மாநாட்டில் வேண்டுகோள் விடுத்தார். —செய்தி.

பெண்கள் சொத்துரிமைக்கு எதிர்ப்பு!

குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கும் வகையில் தமிழகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத் திருத்தத்தை எதிர்த்து உயர் அறமன்றத்தில் வழக்கு ஒன்றைச் சென்னை வழக்கறிஞர் எசு. சுந்தரேசன் என்பவர் பதிவு செய்துள்ளார். —செய்தி.

செனீவா மாந்த உரிமைக் குழுக் கூட்டம்!

இலங்கையில் நடந்த மாந்த உரிமை மீறல் நிகழ்ச்சிகளை செனீவாவில் உள்ள மாந்த உரிமைகள் குழு பிப்ரவரி மூன்றாவது கிழமையில் கூடும் பொழுது தீவிர ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும். இக் கூட்டத்தில் கலந்து கொண்டு விளக்கம் அளிக்க இலங்கை அரசின் தூதுக்குழு ஒன்று அரசுத் தலைமை வழக்கறிஞர் சுனில் டி. சில்வா தலைமையில் கலந்து கொள்ளும். அதே சமயத்தில் அத் தூதுக் குழுவின் முயற்சிகளை முறியடிக்கவும், தங்கள் முறையீடுகளுக்கு ஆதரவு திரட்டவும் இலங்கையில் உள்ள எதிர்க்கட்சிகளின் சார்பில் சிறிலங்கா நவசம சமாசக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார செனீவா செல்லுவார் என்றும் தெரிகிறது.

இலங்கைப் படுகொலைகள், வன்முறைகள், உசாவலுக்கு அழைத்துச் செல்லப் பட்டவர்கள் காணாமல் போனது, காவலில் வைக்கப்பட்டவர்களின் திடீர்ச் சாவு முதலான நிகழ்ச்சிகள் குறித்து அனைத்துலக மாந்த உரிமைகள் குழு அணியப் படுத்தியுள்ள இரண்டு அறிக்கைகள் நடைபெறும் செனீவா கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. —செய்தி.

இந்தியாவின் கடன், வட்டி – சுமைகள்!

இந்தியாவின் பிற நாட்டுக் கடன் தற்பொழுது 5100 கோடி தாலர் (ஏறத்தாழ 86,700 கோடி உருபா) அளவுக்கு மேல் போய் விட்டதாக உலக வங்கியின் அறிக்கை ஒன்று கூறுகிறது. பிற நாட்டுக் கடன்களுக்கான வட்டி, தவணை நிலுவைகளைச் செலுத்துவதற்கான விழுக்காடு 1980-ஆம் ஆண்டில் இருந்ததை விட இப்போது மூன்று மடங்குக்கு மேல், அஃதாவது 8 விழுக்காட்டிலிருந்து 27 விழுக்காடாக உயர்ந்து விட்டதாகவும் அது குறிப்பிட்டுள்ளது. —செய்தி.

உயிர் வாழ்க்கைக்கு மீறிய உயிர் அழிவுச் செலவுகள்!

மூன்றாம் உலக நாடுகள் பொதுநலம், சாரவுணவு ஆகியவற்றுக்குச் செலவிடுவதை விட, ஏராளமான அளவில் போர்க்கருவிகளுக்கும், கடன்களுக்கான வட்டி கட்டுவதற்கும் செலவிடுகின்றன. அதனால் 1990 களில் (அடுத்த 10 ஆண்டுகளில்) 10 கோடிக்கும் மேற்பட்ட குழந்தைகள் பட்டினியால் சாகக் கூடும் என்று உலக நாடுகள் பொதுநலக் கழகம் அதன் ஆண்டறிக்கையில் கூறியுள்ளது. அத்துடன், அந்த அறிக்கையில், மருத்துவ உதவி கிடைக்காமையால் இக்கால், நாள்தோறும் 8000 குழந்தைகள் உயிர் துறக்கின்றன என்றும், வயிற்றுப் போக்கினால் நாள்தோறும் 7000 குழந்தைகளும், நச்சுக்காய்ச்சலினால் நாள்தோறும் 6000 குழந்தைகளும் உயிர் துறக்கின்றன என்றும் அவ்வறிக்கை கூறுகிறது. —செய்தி.

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரனை வைத்துத்தான் தமிழினம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியும்! அவனைப் பார்த்துப் பொறாமைப்படும் போராளிகள் உண்மையை உணர்வது நல்லது! அறத்திற்கே மதிப்பில்லாத பொழுது அறவழி எப்படி வெற்றி தரும்?

மண்டேலாவையும் யாசீர் அராபத்தையும் ஏற்றுக் கொள்ளும் இந்தியா, பிரபாகரனை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை?

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியைப் பொறுத்தவரை நாம் சொல்ல வேண்டியதை முழுவதும் வெளிப்படையாகச் சொல்ல முடியாத ஓர் அற இக்கட்டு(தர்மசங்கடம்) நமக்கு உண்டு. அதற்கு இரண்டு காரணங்கள் ஒன்று அவர்க்கு நம் மேல் எப்பொழுதுமே நல்ல எண்ணம் இருந்தது இல்லை. பல நிலைகளில் அவர் எதிர்பார்த்தபடி அல்லது விரும்பியபடி-நாம் நடந்து கொள்ளவில்லை என்ற மனக்குறை நம் மேல் அவருக்கு உண்டு. அதை அவர். நாம் அவரை மதிக்காத தன்மையாக மதிப்பிட்டுக் கொள்கிறார் போலும்! எனவே நாமும் நம்மைப் போல் தமிழின நலத்திற்காகவே பொதுமை வாழ்விற்கு வந்த ஓரிரண்டு அறிஞர்களும் கூறுகின்ற நடுநிலையான கருத்துகளை என்றுமே அவர் போற்றிக் கொண்டதும் இல்லை; கொள்வதும் இல்லை.

இனி, இரண்டாவதாக, பொதுநிலையில் உறைத்துப் பார்க்க வேண்டிய எதையும் அரசியலாக்கியே பார்க்கின்ற வேட்கையும் விருப்பமும் கலைஞருக்கு இயல்பானது. தமிழ், தமிழின நலக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டிய செய்திகளைக் கூட, அவர் அரசியல் கண்ணோட்டத்திலேயே பார்த்து முடிவு செய்கிறார்.

அரசியல் என்பது எப்பொழுதும் நிகழ்காலச் சிக்கலையே தீர்த்து வைக்க உதவும் ஓர் உத்தி என்பதை அவர் உணர்ந்து கொள்வது நல்லது. எதிர்காலத்திற்குரிய விளைவுகளை அது தொடங்கி வைக்கலாம்; ஆனால் தீர்த்து வைக்க முடியாது. எனவேதான் உடனடிப் பலன் பெற நினைப்பவர்கள் யாவரும் அரசியலிலேயே நுழைய விரும்புகிறார்கள்.

பிரபாகரன் வெறும் அரசியல் நோக்குடையவன் அல்லன்; அரசியல் அவனுக்குத் தெரியாது. வீரத்தின் தொகுப்பு அவன். எனவே, விடுதலை வீரனாக வளர்ந்து நிற்கிறான். விடுதலை வீரனுக்கு அரசியல் தந்திரம் தெரியாது. போர்த்தந்திரம் வேறு; அரசியல் தந்திரம் வேறு. விடணனுக்குத் தெரிந்த அரசியல் இராவணனுக்குத் தெரியாததனாலேயே, இராமனிடம் அவன் தோற்றான். சுக்கிரீவனுக்குத் தெரிந்த அரசியல் வாலிக்குத் தெரியாமற் போனதாலேயே இராமனால் அவன் கொல்லப் பட்டான். தமிழ் மாவீரன் மாவலி ஆட்சி மேற்கொண்ட அரசனாகவிருந்தும் வீரவுணர்வே மிகுந்திருந்ததாலும், அரசியல் தந்திரவுணர்வு குறைந்திருந்ததாலும் வாமனன் என்னும் குள்ளப் பார்ப்பனனிடம் அவன் ஏமாறினான். அதேபோல், இணையற்ற வீர அரசன் இரணியனை, அவன் மகன் சிறுவன், பிரகலாதன் துணையுடன் நரசிம்மன் என்னும் பார்ப்பனன் சூழ்ச்சியால் கொன்றான். வீரனுக்குத் தன் கொள்கைநோக்கம்(இலட்சியம்)தான் பெரிது. அரசியல்காரர்க்குக் கொள்கை நோக்கம் பெரிதில்லை. தேவையுமில்லை.

ஆயிரம் அரசியல்காரர்களை நாம் உருவாக்கலாம்; ஒரு விடுதலை வீரனை நாம் வளர்த்து உருவாக்குவது கடினம். பிரபாகரனையும், உமாமகேசுவரன் என்னும் முகுந்தனையும் நாமே நேரில் பார்த்துப் பழகி அறிந்து கொண்ட உண்மைகள் இவை. முகுந்தனுக்கு வீரத்தனம் இருந்த அதே அளவுக்கு அரசியல் உணர்வும் இருந்ததைப் பின்னர்தாம் நாம் உணர முடிந்தது.

ஓரிரண்டு ஆண்டுக்குப் பின்னரே பிரபாகரனின் வீரம் நமக்குப் புலப்பட்டது. தமிழின வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் மலை போல்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

பொதுப் பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டு! அகங்காரமும் ஆடம்பரமும் இல்லாத தலைமையமைச்சர் வி. பி. சிங்!

வி. பி. சிங் தலைமையமைச்சராகப் பதவிக்கு வந்த பின் எத்தனையோ பொதுப் பண்புகளை வெளிப்படுத்தியிருப்பது, பொது வாழ்வில் ஈடுபடுபவர்களும், தங்களை மக்கள் தொண்டர்களாக அறிவித்துக் கொண்டவர்களும் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துப் பின்பற்றத் தக்கவையாகும். தம்மிடத்தில் அதிகாரம் உள்ளது என்பதற்காக, மக்கள் வரிப் பணத்தில் குளிர்காயும் தந்நல அதிகார ஆடம்பர வெறி இந் நாட்டில் பொதுத் தொண்டுக்கு வரும் பெரும்பாலரிடம் உள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

வி. பி. சிங் தலைமைச்சராகப் பதவியேற்றவுடனேயே, அடிக்கடி தம்மைத் தொலைக்காட்சியில் காட்டுவதைத் தவிர்த்தார். இராசீவின் விளம்பர வெறிக்கு இது நேர் மாறானது.

அரசுப் பொது விருந்து, வரவேற்பு, வீணை ஆடம்பரச் செலவுகள், தமக்குரிய தேவையற்ற பாதுகாப்பு வளையங்கள் முதலிய பல அதிகாரப் பெருமை. அமைப்புகளை நீக்கினார். இவற்றால் மக்கள் பணம் பெருமளவுக்குப் பாதுகாக்கப் பட்டது.

இராசீவ் தலைமையமைச்சராகவிருந்த பொழுது அவருக்கு மட்டும் தனிப்பட்ட அளவில் நாளொன்றுக்கு ஏறத்தாழ ஒரு கோடி உருபா செலவழிக்கப்பட்டது. மொத்தம் அவர் பதவியிலிருந்த நாள்கள் 1667. (ஏறத்தாழ 4½ ஆண்டு). அந்தக் காலத்தில் அவர் பாதுகாப்புக்கு மட்டும், அரசுப்பணம்—அஃதாவது மக்கள் பணம் ஏறத்தாழ 2000 கோடி உருபா பாழாக்கப்பட்டுள்ளது. இன்னும் அவருக்குச் சம்பளமாகவும், அவருக்கும் அவர் குடும்பத்திற்கும் ஆன பராமரிப்புக்குமாக எத்துணைப் பணம் செலவழிக்கப் பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்! தலைமையமைச்சர்களிலேயே வெளிநாட்டுப் போக்குவரத்தில் அவரும் அவர் தாயான இந்திராவுந்தாம் மிக அதிகமான பொதுப் பணத்தைச் சூறையாடியுள்ளார்கள் என்று தெரிகிறது. இந்தியா போலும் வறுமையிலும் அறியாமையிலும் வாடும் மக்கள் உள்ள ஒரு குடியரசு நாட்டில் இச் செலவுகள் கொடுமையிலும் மிகக் கொடுமையாகும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

இராசீவுக்கு அவர் பதவிக் காலத்தில் செலவழித்த தொகையில், ஒரு மாநிலத்தையே கூட உருவாக்கியிருக்கலாம் என்று அரசியல், பொருளியல் அறிஞர்கள் மதிப்பிடுகிறார்கள்.

வி. பி. சிங் தமது பாதுகாப்புச் செலவை இப்பொழுது நாள்தோறும் வெறும் 60 ஆயிரம் உருபாக்களாகக் குறைத்துக் கொண்டதாகச் சொல்லப் பெறுகிறது. இஃது ஒன்றே அவரின் மக்கள் நலப் பண்புக்கு எடுத்துக் காட்டான பொதுக் கடைப்பிடியாகும்.

அத்துடன் தலைமை, துணைக் குடியரசுத் தலைவர்கள், தலைமையமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் பயணம் செய்வதற்கென்றே விலையுயர்ந்த தனி வானூர்திகள் இரண்டு இந்திய அரசிடம் உண்டு. அவற்றில் பறக்கின்ற பொழுது அவர்களுக்கென சில சிறப்பு ஏற்பாடுகளும் உண்டு. குறிப்பாக அவற்றில் பறந்து கொண்டே இந்தியாவில் உள்ள எந்தத் தனி ஆளிடமும் தொலைத் தொடர்பு கொள்ளலாம். அதற்கென்று ஒரு மணிக்கு 7500 உருபா செலவாகும்.

இராசீவ் அவ் வானூர்திகளில் பறக்கும் பொழுது இத் தொலைத் தொடர்புக் கருவியைத் தேவையற்ற முறையில் பல மணி நேரம் பயன்படுத்துவார். தலைவர்களிடம் அதிகாரிகளிடம் மட்டுந்தாம் என்றில்லாமல், தில்லி குதிரைப் பந்தயச் சாலையில், தம் வீட்டில் உள்ள பிள்ளைகளுடனும் அடிக்கடி தொடர்பு கொண்டு கவலையில்லாமல் அரசுப் பணத்தை வீணாக்குவார்.

ஆனால், வி. பி. சிங் அத்தகைய வசதிகளை மட்டுமன்று, அவ்வானூர்திகளைப் பயன்படுத்துவதையே தவிர்த்து விட்டார். அவர் மக்கள் பயணம் செய்யும் பொது வானூர்திகளையே பெரும்பாலும் பயன்படுத்துகிறார்.

மேலும், குடியரசுத் தலைவர்கள், காந்தி முதலிய இந்திய தேசியத் தலைவர்கள், தலைமையமைச்சர் படங்கள் முதலியவற்றை அரசு அலுவலகங்கள், அரசுப் பொதுக் கூட்டங்கள் இவற்றில் மாட்டுவது வழக்கம். வி. பி. சிங் இது போல் தம்முடைய படங்களை மாட்டக்கூடாதென்று கண்டிப்பான உத்தரவு போட்டுள்ளார்.

இவர் பொதுக் கூட்டங்களுக்குச் செல்லும் பொழுதும், பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும் போதும் அதிகமான கட்டுக் காவல் தேவையில்லை என்று கூறி, அதைக் கடைப் பிடித்தும் வருகிறார். இராசீவ் பொதுக் கூட்டங்களில் பேசும் பொழுது குண்டு துளைக்காத கண்ணாடி அறை, உடைகள் இவற்றைப்பல இலக்க உருபாச்செலவில் ஏற்பாடுகள் செய்யப் பட்டன என்பதை நாம் மறந்து விடக் கூடாது. O

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். O

Scanned with CamScanner

தமிழ்த் தேசியத் தன்னுறுதி !*

(சென்னை, பெரியார் திடலில் 1990 பிப்ரவரி-25 ஞாயிற்றுக் கிழமை நடந்த தமிழ்த் தேசியத் தன்னுறுதி மாநாட்டுத் தொடர்பாக வெளி-யிடப் பெற்ற சிறு வெளியீட்டுச் சுருக்கம். (தூய தமிழ்ப்படுத்தப் பெற்றுள்ளது.) (இப் பொதுக் கருத்தில் நமக்கு மாறுபாடில்லை; ஆனாலும் அடிப்படைக்கருத்தில் நமக்கு உடன்-பாடில்லை. இருப்பினும் இக் கருத்து விளக்கங்கள் மிகச் சிறப்புடையன. அன்பர்கள் அவற்றைக் கவனிக்க வேண்டும் என்பதற்காகவே இங்கு வெளியிடுகிறோம்.)

I தன்னுறுதி (Self-Determination) ஏன்?

1950, சனவரி 26-ஆம் நாள் செயலுக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டம் தனது முகப்புரையில் அனைத்து மக்களுக்கும் மாபெரும் வாக்குறுதிகள் அளித்தது.

குமுக, பொருளியல் மற்றும் அரசியல் நயன்மை(நீதி); சிந்திக்க, கருத்துரைக்க, நம்பிக்கை கொள்ள, சமயப்பற்று வைக்க மற்றும் வழிபட உரிமை; குமுகாய மேனிலை மற்றும்; வாய்ப்பு ஆகியவற்றில் சமன்மை:

இவற்றை அனைவருக்கும் மேம்படுத்துதல்; தனியார்களின் கண்ணியத்தை உறுதிப் படுத்து-வதுடன் கூடிய உடன்பிறப்பாண்மை (சகோதரத் துவம்) மற்றும் தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்-பாடு.

இவை முகப்புரையின் சொல்லுறுதிகள்.

இவை வெறும் புனையப்பட்ட சொல்லடுக்குக-ளாக முகப்புரையில் வீற்றிருக்கின்றன என்பதே நாற்பதாண்டுக் காலப் பட்டறிவு!

தேசிய இனத்திற்குரிய குமுக ஞாயம் (சமூக நீதி) கிடைக்கவில்லை. வருணசாதி முடக்கத்தி-லிருந்து மீள்வதற்குரிய குமுக ஞாயமும் உரியவாறு கிடைக்கவில்லை.

வறுமையிலிருந்தும், வேலையின்மையிலிருந்-தும் பாதுகாத்துக் கொள்வதற்கான பொருளியல் ஞாயமும் கிட்டவில்லை; விருப்பப்படி அரசமைப்பை உருவாக்கிக் கொள்ளும் அரசியல் ஞாயமும் கிடைக்கவில்லை.

ஆளும் வகுப்பும், ஆட்சியாளர்களும் வரை-யறுக்கும் வரம்புக்குட்பட்டுச் சிந்திக்கவும், கருத்து வெளியிடவும் மட்டுமே உரிமை இருக்கிறது.

இந்தி மொழியை அலுவல் மொழியாகத் திணிக்கும் போது; தேசிய இனங்களிடையே சமனிலை என்பதற்கு வாய்ப்பே இல்லை.

தனித்தனி தேசிய இனங்களிடையே சமனிலை அடிப்படையில் நிலவ வேண்டிய உடன்பிறப்-பாண்மை(சகோதரத்துவம்) மறுக்கப்படுகிறது.

தேசிய இனங்கள் தங்கள் தனித்தன்மையை அழித்துவிட்டு, இந்தி மொழி மற்றும் இந்துமதப் பண்பாடு, குறிப்பாக வருணசாதி வேறுபாடு மற்றும் நெறிக்கோட்பாடு ஆகியவற்றில் கலத்தல் (சங்கமம்) ஆகிவிடும் 'தேசிய ஒருமைப்பாடு' கட்டாயமாக்கப் படுகிறது.

வேதகாலப் பண்பாட்டை உயர்த்திப்பிடிக்கும் வகையில் இந்தியாவிற்குப் 'பாரதம்' என்று அரச-மைப்புச் சட்டத்தில் பெயர் சூட்டியதன் மூலம் 'மதச்சார்பற்ற அரசு' என்பதில் உள்ள போலித்-தனமும் அம்பலமாகிறது.

நாடு முழுவதும் குமுறல்—கொந்தளிப்பு:

குமுகாய, பொருளியல், அரசியல் முனைகளில் வஞ்சிக்கப்பட்ட இந்திய நாட்டு மக்கள் வெவ்வேறு அளவுகளில் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்; பல்வேறு வடிவங்களில் கொந்தளிக்கிறார்கள்.

தன்னுறுதி (சுயநிர்ணய) உரிமைக்காக பஞ்சாப், விடுதலை நாட்டுக்காக காசுமீர், நாகாலாந்து, மணிப்பூர் ஆகியவை போர்க்களத்-தில் நிற்கின்றன. அயலாரை வெளியேற்ற அசாம், தனி மாநிலத்திற்காக சார்கண்ட், உத்தர்கண்ட், போடோலாந்து மற்றும் கூர்க்காலாந்து ஆகிய-வற்றின் செருக்களங்கள் இன்றைய வரலாறு.

ஆலை முதலாளிகளின் சூறையாடலுக்குப் பலியிடப்பட்ட உழவர்களின் வாழ்வுக்காக உத்தரப் பைதிர(பிரதேச)த்திலும், மராட்டியத்திலும் கொந்தளிப்பு! நக்சல்பாரி பாதையில் புரட்சி என்று

* Self Determination—என்கிற ஆங்கிலச் சொல்லுக்கு 'சுய்நிர்ணயவுரிமை' என வடமொழியில் பெயர்த்துப் பயன்படுத்தினர் பார்ப்பனப் பொதுவுடைமையர். அதையே இக்கால் 'தன்னுரிமை'—என இவ் வெளியீடு மொழி பெயர்த்துள்ளது. இந்திய ஒன்றியம் என ஒன்றுடன் கூட்டமைத்துக் கொள்ளுகிற உறவுடன் தமிழ்நாட்டு அரசியல் அமைப்பு—அனைத்து மட்டங்களிலும் தன் 'உரிமை' கொள்ளுகிற அமைப்பாக இருக்க முடியாது. அது ஒரு கூட்டரசிடமிருந்து பிரிந்து போக உரிமையுள்ள நிலையில், தன்னை உறுதி செய்து கொள்ளும் 'தன்னுறுதி'—அமைப்பாக மட்டுமே இருக்க முடியும்.

Scanned with CamScanner

ஆதிவாசிகளை முன்னிலைப்படுத்தி ஆந்திரப்பைதிர(பிரதேச)த்தில்போராட்டம் இந்தித்திணிப்பை எதிர்த்து—இட ஒதுக்கீட்டில்ஞாயம் கேட்டுத் தமிழ்நாட்டில் பொருமல்கள்— போராட்டங்கள்!

அனைத்திந்தியத் தன்மையில் எழுச்சி இல்லை:

குமுக, பொருளியல், அரசியல் அரங்குகளில் வஞ்சிக்கப்பட்ட மக்களின் உணர்வெழுச்சி(ஆத்திரங்)களுக்கும், போராட்டங்களுக்கும் 'அடிப்படைக் காரணங்கள் அனைத்திந்தியத் தன்மை வாய்ந்தவை. ஆனால், இப் போராட்டங்களில் அனைத்திந்திய நோக்குமில்லை; போக்குமில்லை.

இச் சிக்கல்களுக்குத் தீர்வைத் தேடி அனைத்திந்தியக் கட்சிகள் குடிநாயக முழக்கத்தை முன் வைக்கவில்லை, போராட்டமும் நடத்தவில்லை.

தேசிய இனச் சிக்கலை ஒட்டி நடைபெறும் போராட்டங்களை, முதலாளிய மற்றும் பெரும்பாலான அனைத்திந்திய இடதுசாரிக் கட்சிகள்— 'பிரிவினைப் போராட்டங்கள்' 'ஒருமைப் பாட்டுக்கு ஏதம் (ஆபத்து)' என்கிற அளவில்தான் பார்க்கின்றன; அவற்றை எதிர்க்கின்றன. இப் போராட்டங்கள் தன்னுறுதி (சுயநிர்ணய) உரிமையின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுவதால் எழுகின்றன, என்பதை இக் கட்சிகள் நடைமுறையில் ஏற்றிசையவில்லை. அத்துடன் ஆட்சியிலிருக்கும் கட்சிகள் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் அரசியல் தந்திர(சாகச)த்துடன் இச் சிக்கலை அணுகுகின்றன.

அனைத்திந்தியத் தன்மை வாய்ந்த சிக்கல்களைத் தீர்க்க உழவர்கள் போராடும்போது, ஆளுங்கட்சி என்றால் அடக்கும்; எதிர்க்கட்சி என்றால் ஒப்புக்கு ஆதரிக்கும். வருண—சாதி அமைப்பால் வரலாற்று முறையாகத் தாக்குண்டவர்கள் இட ஒதுக்கீட்டில் ஞாயம் கேட்டு எழுச்சி கொள்ளும் போதும் இக் கட்சிகள் இவ்வாறே நடந்து கொள்கின்றன.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், மக்கள் குமுறிக் கொந்தளிக்கும் சிக்கல்களில் அனைத்திந்தியக் கட்சிகள் அவர்களைக் கைவிட்டு விடுகின்றன என்றே கூறலாம். தனித் தன்மை வாய்ந்த தேசிய இனச் சிக்கல்களும், வருண சாதிச் சிக்கல்களும் அடிப்படையான இந்தியச் சிறப்புறுப்புகள் என்பதை இக் கட்சிகள் முழு அளவில் ஏற்றுக் கொள்ளவில்லை.

இவ் விருவகைச் சிக்கல்களிலும், பொதுவாகப் பேராய(காங்கிரசு)க் கட்சியின் நிலைப்பாட்டையே வெவ்வேறு அழுத்தங்களில் பிற அனைத்திந்தியக் கட்சிகள் கொண்டிருக்கின்றன.

அனைத்திந்தியக் கட்சி என்று சொல்வதற்குரிய முழுப் பொருளில் ஒப்பீட்டளவில் இன்று விளங்கக்கூடிய ஒரே கட்சியான பேராயத்தின் (காங்கிரசின்) சாய்காலும் (செல்வாக்கும்) சுருங்கி வருகிறது. தமிழ்நாடு, அசாம், பஞ்சாப், சம்மு—காசுமீர் ஆகிய மாநிலங்களில் உடனடி எதிர்காலத்தில் மீண்டும் தலைதூக்க முடியாத பின்னடைவில் பேராயம்(காங்கிரஸ்) உள்ளது. ஆந்திரப்பைதிரத்திலும் பேராயத்திற்கு முழுத் தனியுரிமை இல்லை. இங்கெல்லாம் தேசிய இனச் சிக்கலின் அடிப்படையில் மாநிலக் கட்சிகள் வளர்ந்துள்ளன.

நாட்டு விடுதலை என்கிற வல்லரசி(ஏகாதிபத்தி)யத்திற்கு எதிரான 'தேசியக்' கோரிக்கை நிறைவேறிவிட்ட பிற்காலத்தில் இந்தியாவின் தேசிய இனச் சிக்கல் புதிய பரிமாணத்தை-புதிய வடிவத்தைப் பெற்றது. இந்தப் புதிய மாற்றத்தைப் பேராயம் (காங்கிரசு) உள்ளிட்ட அனைத்திந்தியக் கட்சிகள் முழு அளவில் ஏற்றுக் கொள்ள (அங்கீகரிக்க) மறுக்கின்றன. விடுதலைப் போராட்டக் காலத்தில் எழுப்பப்பட்ட 'இந்திய தேசிய' முழக்கத்தையே இன்றும் முதன்மையாக அக் கட்சிகள் முன் வைக்கின்றன.

உரிமை பெற்ற இந்தியாவில் ஒவ்வொரு தேசிய இனமும் மற்றும் இனக்குழுவும் தனது மொழி, பண்பாடு, பொருளியல் வாழ்வு, அரசியல் இன்றியாண்மை ஆகிய நிலைகளில் வரலாற்றில் தன் தன் அடையாளத்தைப் பதிக்க விரும்புகின்றது; அதற்காக விழித்து எழுகின்றது.

1947, ஆகத்து—15 வரை எல்லாத் தேசிய இனங்களும், மற்றும் இனக்குழுக்களும் தங்கள் விடுதலை ஒட்டுமொத்த இந்திய விடுதலையோடு இணைந்திருந்ததை உணர்ந்தன; ஒன்றுபட்டுப் போராடின. ஒட்டுமொத்த இந்திய விடுதலைக்கான ஒரு நாளுக்காக ஒன்றாகக் காத்திருந்தன. அன்று அது வரலாற்றின் முன் தேவையாக—நடைமுறை உத்தியாக இருந்தது.

1947, ஆகத்து 15-க்குப் பிறகு வறுமை, வேலையின்மை, வருண—சாதி ஒடுக்குமுறை மற்றும் அதன் பின் விளைவுகள் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறவும், புதிய வாழ்வை அமைத்துக் கொள்ளவும் ஒவ்வொரு தேசிய இனமும், மற்றும் இனக்குழுவும் ஓர் அனைத்திந்தியப் பொன்னாளுக்காகக் காத்திருக்க முடியாது; அது வரலாற்று இயல்புமில்லை; இன்று அது வரலாற்றின் முன் தேவையுமில்லை; எனவே இன்று அது நடைமுறை உத்தியாகவுமில்லை.

ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் ஒவ்வொரு தேசிய இன மக்களும் அவரவர் தேவை—புரிதல்—முதிர்ச்சிக்கேற்ப சிக்கல்களுக்கு அவரவர் தீர்வு காண வாய்ப்பிருக்க வேண்டும். இந்த வாய்ப்புதான் அனைத்துத் தேசிய இனங்களும் இந்தியாவின் ஒற்றுமையை மன முழுமையாகப் பாதுகாப்பதற்கு வழிகோலும்.

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

பறம்பை அறிவன் பக்கம்!

1. நாட்டில் அரசியல் மாற்றங்கள்!

தமிழ்நாட்டில் பாராளுமன்றத் தேர்தல் முடிந்தது. அதன் பின் விளைவாகத் தமிழக அமைச்சரவையின் துறை மாற்றம் நடந்தது. மாவட்ட ஆட்சியர்—இந்திய ஆட்சித் துறை அலுவலர்களின் துறை மாற்றமும் நிகழ்ந்தது.

உணவு அமைச்சர் ஆர்க்காடு வீராச்சாமி மின்துறை அமைச்சராக்கப்பட்டார். அது காரணமாக அந்த அமைச்சர் 'இருப்பிடம்' கொஞ்ச நாள்கள் தெரியாமலிருந்தது. பதவி விலகல் தந்துவிட்டாரா என்ற வினா ஒரு சிக்கலைக் கூட எழுப்பியது. (பின்னர் மீண்டும் பழைய கருப்பன்)

தி. மு. க. செயற்குழுவில் காரசாரமிருந்தது என்கின்றனர். முரசொலிமாறன் இந்திய நகரச் சீர் அமைப்பு அமைச்சராகி உள்ளார். ஏன்? வை. கோபால்சாமிக்கு அப் பொறுப்பைப் பரிந்துரை செய்யக் கூடாது?

"முரசொலிமாறன் தமிழீழக் கொள்கையில் சரியில்லை; இந்திரா பேராய இணைப்பைக் கடந்த தேர்தலில் விரும்பியவர். 'கலைஞரின்' மருமகன்" என்பதால் தி. மு. க. செயற்குழுவில் முரண்பாடு தோன்றியுள்ளதாம்!

உறுதியான நிலைப்பாடு—தமிழினச் சார்பு—இல்லாத கலைஞரின் தலைமை தி.மு.க.வுக்குச் சரிவை ஏற்படுத்தி வருகிறதென்று ப. நெடுமாறன் கூறுகிறார்.

நம் தமிழகத்தில் தமிழின மேன்மைக்கான ஒற்றுமையைக் கொண்டுவரும் தெளிவான அரசியல் கொள்கை உருவாதல் வேண்டும் என்பதுதான் இத்தகைய நிகழ்ச்சிகளால் தோன்றும் முடிவாக உள்ளது!

2. ஆர்.வி.யின் வருத்தமும் எச்சரிக்கையும்?

இந்தியக் குடியரசுத் தலைவர் வேறு. ஆர். வி. என்கிற ஆர். வேங்கடராமன் வேறு. இரண்டு பேரும் ஆள்கின்ற பேரில் ஒன்றுதான். ஆனாலும், எல்லாரையும் போல அவர்க்குள்ள பொறுப்பும்—பதவியும் தனி விருப்பு வெறுப்புகளும் வேறாகவே இருக்கும். இது கற்பனையன்று; வெறும் கருத்தும் அன்று! உண்மை தேடும் நோக்கம் இப்படிச் சிந்திக்க வைக்கின்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 'வைர விழா' நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் ஆர். வி. பேச்சு தினமணி (15-12-89)யில் வந்துள்ளது.

'வட்டார உணர்வுகள் ஊக்குவிப்பு—பல்கலைக் கழகங்களின் தவறான போக்கு, ஆர். வி. எச்சரிக்கை' என்பது தலைப்பு.

உள்ளே, "இந்திய(ப்)பல்கலைக் கழகங்கள் இப்போது பகுதி, சாதிப் பிரிவினை உணர்வுகளைத் தூண்டிவிடப் பயன்படுத்தப் படுகின்றன" என ஆர். வி. வருத்தம் தெரிவித்தார் என்பது செய்தி!

வருத்தம்! எச்சரிக்கை இரண்டும் ஒரே பொருள் கொண்ட சொற்கள் ஆகா. ஒரு நெருக்கமான பொருள் உடையனவும் இல்லை!

இந்த இரண்டு சொற்களும் ஆர். வி. க்கும் குடியரசுத் தலைவருக்கும் உள்ள 'நெருக்கம்; போன்றவை. ஆர். வி. நீடிக்கும் கருத்து; குடியரசுத் தலைவர், நீடிக்கும் பதவி யாகாது.

என்கிறபோதும், இச் சொற்களின் பின்புலங்களைக் கற்பனை செய்து பார்ப்பதில் ஓர் உண்மை வெளிப்படும். அஃதென்ன? அவருடைய இன நலனு?

3. இரண்டு கட்சிகள்! ஒரே குரல்!

தினமணி (21-12-89) *'பிரிவினையாளர்களுடன் ஒப்புரவு (சமரசம்) இல்லை'* என்று தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது. அடுத்து மூன்று கட்டமிட்டு 1. தேசியச் சிக்கல்களில் பொதுக் கருத்துக்கு முயற்சி 2. விலையேற்றப் போக்கைத் தடுப்பதற்கு முதலிடம் 3. இலங்கையுடன் ஒத்துழைப்பை மேம்படுத்த நடவடிக்கை எனும் மூன்று குறிப்புரைகளைத் தந்துள்ளது.

ஆட்சிமுறையில் புதிய மாதிரியை இந்த அரசு பின்பற்றும் என்றும் "கருத்தொற்றுமை அரசியல் பாணி' கடைப் பிடிக்கப்படும் என்றும் குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலத்தில் கால்மணி நேர உரையில் அவர் வைத்த கருத்துகள் இவை.

'நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை' பற்றிப் பேசுகையில் இன்றைய ஆளும் தேசிய முன்னணி, நேற்றைய இந்திரா பேராய—இன்றைய எதிர்க்கட்சி ஆகிய இரண்டும் ஒரே குரலில் பேசுவதைக் காண்கிறோம்.

இவை இரண்டு கருத்துகளில் உள்ளன என்றால் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை குறித்த தங்களின் திட்டவட்டமான வரையறைகளை விளக்கினால் நல்லது.

பஞ்சாப் சிக்கலில் தேசிய முன்னணி நடவடிக்கைக்கு, இந்திரா பேராயத்தைச் சேர்ந்த பஞ்சாப் தலைவர் ஒருவர் ஆதரவாகப் பேசியுள்ளதை இ. எம். எசு. சுட்டிக் காட்டியுள்ளார். இந்த வகையில் 'ஒருமைப்பாடு' பற்றிய—தன்னாட்சியுரிமையற்ற தீர்வுக்கு இ. பொ. க. (மா)வும் இந்திரா பேராயமும் இணைந்து நிற்கும் என்கிற அறிகுறியாகவே இ. எம். எசின் 'கணிப்பு'ம் கருத்தும் உள்ளன எனலாம்!

Scanned with CamScanner

4. கலைஞர் பணி முடிந்து விட்டதா?

"வி. பி. சிங்கும், நடுவணரசும் ஈழச் சிக்கலில் சரியாக நடந்து கொள்ளும்! இரண்டு நாள் பேச்சுரையை எடுத்துக் கூறியவுடன் கலைஞர் தம் பணி முடிந்து விட்டதாகக் கூறியுள்ளார்" என்பதுபோல—

"இலங்கைத் தமிழர் சிக்கலில் எனது பணி முடிந்து விட்டது" முதல்வர் கருணாநிதி நேர்காணல் என்ற 'தினமணி' செய்தித்(22-12-89) தலைப்புள்ளது.

அன்று இராசீவ், ம. கோ. இரா.(எம்.சி.ஆர்.) தலையில் வைத்து விட்டு, ஈழச் சிக்கலில் மேலும் பல சிக்கலைத் தொடர்ந்தார். அதன் விளைவைத் தமிழினம் செரித்துக் கொள்ள முடியாமல், தமிழகம் தந்நலக்காரர்களால் இரண்டு பட்டுக் கிடப்பதை நாம் மறப்பதற்கில்லை.

கலைஞர், எதிர்காலத்தில் வி. பி. சிங்கும் இராசீவ் போல நடந்து கொண்டால் என்ன செய்வது என்பது போலக் கருதித் தம் தலையை ஈழ்ச்சிக்கலிலிருந்து கழற்றிக் கொள்ள நினைக்கிறார் போலும்!

செய்திகள் 'விடுதலைப் புலிகள் தரப்பில்' மன நிறைவு ஏற்பட்டதுபோல் வெளி வருகின்றன!

இவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள்? எப்படிப்பட்ட கருத்துகளில் இணக்கம் ஏற்பட்டது? உளவு நிறுவனத் தலையீட்டை இன்றைய வி. பி. சிங் அரசு நிறுத்தி—அல்லது விலக்கி வைத்திருப்பது எந்த வகையில்? அதன் கடந்த கால நடவடிக்கை குறித்துப் பேச்சுரையில் வந்ததா?

'தமிழர் தேசியப் படை' என்ற பேரில் 'இந்தியா தமிழினத்திற்குள் ஓர் இரண்டகப் போக்கை வளர்த்து வந்ததா? அந்தக் குற்றத்தை வி. பி. சிங் அரசு 'ஆம்' என்று ஒப்புக் கொண்டுள்ளதா?

எதிர்காலத்தில் 'ஈழ விடுதலை' பற்றிய முடிவு எப்படி இருக்கும்? இந்த மாதிரியான பல வினாக்களுக்குத் 'தமிழினத் தலைவர்' பொறுப்புள்ளவர் ஆவார். என்றே கருதுகிறோம்! எனவே, 'எனது பணி முடிந்து விட்டது' என்று கலைஞர் கூறி மக்களிடமிருந்து விலகி நிற்க முடியாது,

எதிர்கால நடவடிக்கைக்கு அவர் பேச்சுரையும் ஒரு காரணமாகி விட்டது. எனவே, எதிர்காலம்தான் அவர்க்குள்ள பணியை முடிவு செய்யப் போகிறது.

5. எசு. என். நாகராசன் பார்வையில் என் சிந்தனைகள்!

பரபரப்பான நடவடிக்கை... ஆழ்ந்த சிந்தனை. இரண்டின் இணைவாக விளங்கும் தோழர் எசு. என், நாகராசன் ஒரு மார்க்சிய அறிஞர்—படிப்பாளி—பண்பாளர். கடுமையாகத் திறன் செய்பவர். பேச்சில் இந்தத் தமிழ் மண்ணின் மக்கள் நடையும்—உயரிய ஆங்கிலப் புலமையும் காணலாம்! இரண்டு முரண்களின் இணைவாகவே எனக்கு அவர் காட்சி தருகிறார். அவருடைய கட்டுரைகளைப் படித்திருக்கிறேன். இப்போதும் படிக்கிறேன், என்றாலும் எந்த அளவு புரிந்திருக்கிறேன் என்பதைச் சொல்லி வருகிறேன். இந்த முயற்சி ஒரு படிப்பைத் தொடர்வதற்கே...

உயிரியலில் முதுகலைப்பட்டம் பெற்றவர் 1962 முதல் மார்க்சிய இயக்கத்தில் உள்ளவர். மண்ணுக்கேற்ற முறையில் மார்க்சியத்தை விளக்க வல்லவர். இந்த வகையில் எனக்கு மார்க்சியத்தை விளக்கக் கூடியவர் என முதலில் 'ஞானி'யே அறிமுகமாயிருந்தார்!

இப்படிப்பட்ட எண்ணம் தி.மு.க. ஆர்வலனாக இருந்த எனக்கு '55, 60 களில் இருந்தது. நான் பள்ளியிறுதிப் படிப்பில் எழுதிய 'போர்மீது போர்' என்ற கட்டுரையில் இதனை விளக்கியிருந்தேன். அன்று என் ஆசிரியர்கள், என்னுடைய தமிழ் நடையில் இருந்த செறிவான சொற்செட்டைக் கண்டு பாராட்டியுள்ளார்கள். ஆனாலும், என் மீதுள்ள நம்பிக்கைத் தளர்ச்சி காரணமாகப் பிறரிடம் உள்ள ஆற்றல்களைப் பாராட்டி அவர்களை உயர்த்திப் பிடிப்பதில் இயக்கம் கட்டி உதவி வந்திருக்கிறேன்! இதனை நான் கூறக் காரணம், எசு. என். நாகராசனும் 'என்னிடம் அளவுமீறி' வைத்த எதிர்பார்ப்புக்கு எந்தவகையிலும் செயல் பட்டுவிட்டேன் என்று கூறுதல் இயலாது!

அறிவியல், தொழில் நுட்பம், கல்வி: ஒரு மார்க்சியக் கண்ணோட்டம்-என்ற எசு.என்.நாகராசனின் கட்டுரையிலிருந்து...

'ஆளும் கருத்துகள் ஆளும் வகுப்பின் (வர்க்கத்தின்) கருத்துகளே'—மார்க்சு.

- மார்க்சும் ஏங்கல்சும், தாம் அறிய வந்த ஒவ்வொரு கருத்தையும் கருத்தாக்கத்தையும் கொள்கையையும் தீவிர 'வர்க்க'ப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தினார்கள்.
- ஒரு கருத்து எவ்வளவு அருவமானதாகவும் பொதுவானதாகவும் தோன்றினாலும் 'வர்க்க'த் தப்பெண்ணங்களிலிருந்து விடுபட்டிருக்க முடியாதென்பதைத் தெளிவாகக் காட்டினார்கள்.
- அரசியல், வரலாறு, அறிவியல், குமுகவியல் மாந்தவியல், உளவியல், கலை, இலக்கியம் போன்றவை தொடர்பான கருத்துகளின் 'வர்க்க'த் தன்மையை எளிதாகக் காட்ட முடியும்.
- ஆனால், இயற்பியல் அறிவியல்களின் (Physical Sciences) வர்க்கச் சார்பினைக்

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலக அரங்கில்கூட இன்று தேசிய இனச் சிக்கல் தீர்ந்து போய்விட்ட ஒரு செய்தியன்று, மாறாக, இன்று இச் சிக்கல் புதிய அழுத்தம் பெற்றுள்ளது. வெவ்வேறு நாடுகளில் அந்தந்த நாட்டின் தனித்தன்மைக்கேற்ப வெவ்வேறு வடிவமெடுக்கிறது. பாலத்தீனம், தென்னாப்பிரிக்கா, நமீபியா மற்றும் ஈழம் ஆகியவற்றில் நடைபெறும் தேசிய இனப் போராட்டங்கள் புதிய கட்டத்தை எட்டியுள்ளன. நிகரமை (சோசலிச) நாடான சோவியத்து ஒன்றியத்தில் தேசிய இனச் சிக்கல் புதிய வீச்சைப் பெற்றுள்ளது. எனவே, இன்று தேசிய இனச் சிக்கல் என்பது இந்தியச் சிக்கலாக மட்டுமின்றி, ஓர் உலகச் சிக்கலாகவுமிருக்கிறது.

தமிழ்த் தேசியச் சிக்கல்!

இருபதாம் நூற்றாண்டுக்கு விடை கொடுத்து, இருபத்தோராம் நூற்றாண்டுக்குக் கைகொடுக்க உலகம் அணியமாகிக் கொண்டிருக்கும் வேளையில், தமிழர்களின் வாழ்க்கை நிலையை ஆராய்கிறோம். வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளிலும் மற்றும் சில நிகரமை நாடுகளிலும் மக்கள் எட்டியிருக்கின்ற பொருளியல், பண்பாட்டு வாழ்க்கைத் தரத்தையும் இவ்வகையில் தமிழக மக்கள் இருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், 'நெஞ்சு பதைக்கும்; சொல்ல வாய்பதைக்கும்'. அந்நாடுகளில் பண்ணைகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்குப் பகுசரி(சராசரி)யாகக் கிடைக்கும் உணவு-உறையுள் வசதியில் கால் பங்கு கூட கோடிக்கணக்கான நம் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அரைப்பட்டினியோடு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் — அஃதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே உழன்று கொண்டிருப்போர் தமிழ்நாட்டில் இரண்டு கோடி பேருக்கும் மேலே. [அடிப்படை- 7-4-89 அன்று நடந்த மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் தமிழக அரசு தெரிவித்த விளத்தம்]

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தெரியாதோர் 47 விழுக்காட்டுப் பேர். குறைந்த அளவு வசதிகளும், பொதுஏந்தும் இல்லாத குடிசைகளில், மற்றும் ஒண்டுக் குடித்தனங்களில் குடியிருந்து குமைவோர், மக்கள் தொகையில் பெரும்பாலோர். சென்னை நகரில் நடைபாதைகளில் குடும்பம் நடத்துவோர் அந்நகரின் மொத்த மக்கள் தொகையில் 30 விழுக்காட்டுப் பேர் [அடிப்படை: Madras Institute of Development Studies—MIDS]

மாற்று உடையில்லாதோர், குறைந்த அளவுத் துணித்தேவைகளை நிறைவு செய்துகொள்ள முடியாதோர் ஏராளம், ஏராளம்! வறுமைக்கும், பொதுஏந்துக் கேட்டிற்கும் பலியாகிப் பிறந்த ஓராண்டுக்குள் இறந்துவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் 30 விழுக்காடு [ஆதாரம் MIDS]

கம்ம(கிராம)ங்களிலும், நகரங்களிலும் வேலையின்மையால் தாக்கப் படுவோர் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள். வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிந்திருப்போர் மட்டும் 30 இலக்கத்திற்கும் மேலே.

(தொடரும்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

கண்டு கொள்வது அவ்வளவு எளிதன்று. தோழர் எடுத்து வைக்கும் கருத்தை நோக்கின் இவருடைய அழுத்தமான—வர்க்க—வகுப்புக் கண்ணோட்டம் மார்க்சிய அடிப்படையில் காலூன்றி இருப்பதை உணரலாம்!

''ஒவ்வொரு 'வர்க்க'க் குமுகாயத்தின் கருத்துகளும், அந்தக் குமுகாயத்தை ஆளும் 'வர்க்க'த்தின் முத்திரையைப் பெறாமல் போவதில்லை என்பதை மார்க்சியர்கள் பொதுவாக ஒத்துக் கொள்கிறார்கள்'' என்பதைச் சுட்டிக் காட்டும் தோழர்,

''புறநிலை அறிவியல்கள் (objective Sciences) எனப்படும் இயல்பியல் அறிவியல்களைப் பொறுத்தமட்டில் இந்தப் பொதுவான கண்ணோட்டத்தை அவர்கள் பொருத்திப் பார்ப்பதில்லை'' இதனைச் 'சரியென்று' சொல்லும்படியாக இதற்கு எடுத்துக் காட்டாக உள்ளவர்கள் இன்றைய இ. பொ. க (மா) வினரே! O

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்!

கடந்த திசம்பர் '89 முதல் கிழமையில் மொரிசியசில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் அமைக்கப் பெற்ற **உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின்** தலைவராக, சப்பானிய நாட்டுத் தமிழறிஞர் பர். **நொபொரு காரசிமா** அவர்களும், திருவாளர்கள் பர். **வா. செ. குழந்தைசாமி** (துணைவேந்தர் அண்ணா பல்கலைக்கழகம், சென்னை) பர். **மாரிமுத்து** (மலேசியப் பல்கலைக் கழகப் பேராசிரியர்), பர். **குரோ** (பிரான்சு) ஆகியோர் துணைத்தலைவர்களாகவும், திருவாளர்கள் பேரா. **அண்ணாமலை** (மைசூர், நடுவண் மொழியில் நிறுவன இயக்குநர்), பேரா. **வேலு(ப்பிள்ளை)** (யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்), பேரா. **திருநாவுக்கரசு** (சிங்கப்பூர்) ஆகியோர் செயலாளர்களாகவும், திருவாளர்கள் பர். இரா. **முத்துக் குமாரசாமி** (பொது மேலாளர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை), என். **திருமலை** (மொரிசியசு) ஆகியோர் பொருளாளர்களாகவும், திரு. **சிலம்பொலி செல்லப்பன்** ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர்.

விடுதலை நேருமோ?

-பாவலர் இளஞ்சித்திரன்-

சிரிக்காதே!—தம்பி, சிரிக்காதே! (சிரிக்)
சிரித்துச் சிரித்துத்தான் தெருவில் நிற்கிறாய்!
செந்தமிழ் மொழியை, நிலத்தை
இழந்து தவிக்கிறாய்! (சிரிக்)

பிரித்துனை ஆளும் கூட்டத்தைத் தெரியுமா?
பின்னுக்கு அதுஉனைத் தள்ளுவது புரியுமா?
திரித்துனை மாற்றிக் கெடுப்பது விளங்குமா?
தெரியா திருந்தால் உன்இனம் துலங்குமா?
(சிரிக்)

பெற்றஉன் தாய்த்தமிழ்க் கரசிங்(கு) இல்லையே!
பிறமொழி ஆட்சியில் உன்காலம் செல்லுதே!
கற்குமுன் கல்விக்கும் மொழி தமிழ் இல்லையே!
கடமைகள் தெரியா உனக்கெது எல்லையே!
(சிரிக்)

கோவிலில் உன்தமிழ் இறைமுன் இல்லையே!
கொண்டவன் பெயரினும் தமிழென்ப தில்லையே!
சரவினும் தமிழ்அடை யாளங்கள் இல்லையே!
தமிழ்மகள் என்றுனை உலகுசொல்லவில்லையே!

காற்றினில் மானமும் பறந்தே போனது!
கருத்திலாக் குருடனாய் உன்மனம் ஆனது!
சோற்றுடல் வாழ்வுமோர் வாழ்வா? ஏனது?
சொந்தநம் உரிமைக் கொள்கையே தேனது!

கொள்கைக் கென்றுஉன் நண்பரைத் தேடுக!
கொள்கைக் கவரை வளர்க்கவே நாடுக!
கொள்கை யேபுகழ் மாலைகள்! சூடுக!
குப்பையில் வேடிக்கைப் பேச்சினைப் போடுக!

அரிமா எனஎழு வாய்; பகை ஒடுங்குமே!
ஆரியக் கொட்டங்கள் தாமாய் அடங்குமே!
வரிமாப் புலியுன் பாய்ச்சலில் நடுங்குமே;
வடபுலத் திந்தியும் ஓடிடத் தொடங்குமே!

என்னடா தோள்களில் வலிவு குறைந்ததா?
எரிக்குமுன் விழிகளில் தூக்கம் நிறைந்தா?
இன்றுயிர் நெஞ்சினில் வீரமும் மறைந்ததா?
ஏளனப் பேச்சிலுன் காலம் கரைந்ததா?

சிந்தின, கவலைகள் இல்லா உன்னையே!
சீர்படுத்த ஒருபெரி யாரும் இல்லையே!
மந்தனைப் போல்சிரித் திருந்தால் உன்னையே
வாழ்த்தவா போகிறாள் நம்தமிழ் அன்னையே!
(சிரிக்)

நம்பிய அவள்முகம் வாடிடல் ஆகுமோ?
நலிந்துள அவள்முக விலங்குகள் போகுமோ?
தம்பியே, நீவினை மறந்திடில் தீருமோ
தமிழ்நிலத் துன்பங்கள்; விடுதலை நேருமோ?
(சிரிக்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொழிச் சிக்கலும் மார்க்சியர்களும்!

மொழிச் சிக்கலுக்குப் பின்னே ஆழமாகப் புதைந்து கிடப்பது இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் சிக்கலே! இந்தியா ஒரே ஒரு தேசிய இன அரசு அன்று. இந்த உண்மையை மறுத்து மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியாது.

இந்தியைத் தனியொரு ஆட்சி மொழியாக்கத் துடிக்கும் பலர் இனவெறியினால் தூண்டப்பட்டுள்ளனர் என்பது தெளிவு. பல கோடி மக்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி அடக்கு முறையைக் கொண்டு, இந்தியாவின் ஒற்றுமையை நிலை நாட்டுவது என்பது இயலக் கூடியதே அன்று.

அனைத்து மொழிகளுக்கும் சமவுரிமை அளிக்கப் பட வேண்டும் என்பதே இலெனின் காட்டிய வழி! ஒரு மொழி பேசும் மக்களை மற்றொரு மொழியைக் கற்றுக் கொள்ள வலியுறுத்தக் கூடாது என்பதும் அவருடைய கருத்து.

இந்திய அமைப்பியல் சட்டம் 351-ஆவது பிரிவு இந்தியை வளர்ப்பதும், அதைப் பரப்புவதும் நடுவண் அரசின் கடமையாகும் என்று கூறுகிறது. பிறமொழிகளை வளர்க்கும்கடமை அதற்கில்லையா? அம் மொழிகளை வளர்க்கும் கடமையை யார் மீதும் அந்த அரசியல் சட்டம் சுமத்தவில்லை.

இந்திய ஒன்றியம் இந்தி பேசுபவர்களுக்காக மட்டும் ஏற்பட்டதா? அதற்குக் கிடைக்கும் வருமானம் இந்தி பேசும் மாநிலங்களிலிருந்து மட்டுமா கிடைக்கிறது?

அரசியல் சட்டத்தின் 8-ஆவது பட்டியலில் குறிப்பிடப் பட்டுள்ள மொழிகள் அனைத்தும் நடுவணரசின் மொழிகளாக ஏற்றுக் கொள்ளப் பட வேண்டும். நடுவணரசின் சட்ட வரைவுகள் (மசோதாக்கள்) சட்டங்கள் எல்லாம் எல்லா மொழிகளிலும் வெளியிடப் பட வேண்டும்.

— பி. இராமமூர்த்தி 'நூல்:' மொழிப் பிரச்சனையில் மார்க்சிஸ்ட்டுகளின் நிலை•

புலவர், திருக்குறள்மணி இறைக்குருவனாரின் மலேசிய, சிங்கைச் சுற்றுச் செலவு!

அருந்தமிழ்த் தொண்டரும், தென்மொழிக் குடும்ப உறவாண்மையரும், சென்னைத் தமிழ் நெறிக் குடும்ப அமைப்பாளரும், சென்னை முரசொலி யின் துணை ஆசிரியரும் ஆகிய புலவர், திருக்குறள்மணி இறைக்குருவனார், அங்குள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளின் அழைப்பின் பேரில், கடந்த 16-2-90 அன்று இரவு 1 மணியளவில் மலேசியன் வானூர்தி வழி கோலாலம்பூர் சென்றார். புலவர் அவர்களின் மலேசிய, சிங்கைச் செலவு ஏறத்தாழ ஒருமாத அளவு நிகழும் என்று தெரிகிறது.

Scanned with CamScanner

செய்தி ஒலி பரப்புத் துறை அமைச்சர் உபேந்திரா-வுக்கு ஒரு மடல்!

மாண்புமிகு செய்தி பரப்புத்துறை அமைச்சர் உபேந்திரா அவர்களுக்கு வணக்கம். இன்றைய Indian Express நாளிதழில் (20-2-90) ஆர். சி. சின்கா இணைச்செயலர், செய்தி ஒலிபரப்புத் துறை அவர்கள், வானொலி, தொலைக்காட்சிக்குத் தன்னாட்சி வழங்குவது குறித்த விளம்பரம் கொடுத்திருந்தார். அதில் கருத்துகள் இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ மட்டும் கடிதங்கள் எழுதப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தங்கள் துறையில் இப்படிப்பட்ட தவறுகள் நேரக் கூடாது என்ற விருப்பத்தில் இம் மடலைத் தங்களின் பார்வைக்கு எழுதுகிறேன்.

இந்தி பேசுவோருக்கு எப்படி ஒப்போலை உரிமை (வாக்குரிமை) அளிக்கப்பட்டு இருக்கிறதோ, அதே போல் எங்களுக்கும் ஒப்போலை உரிமை (வாக்குரிமை) உள்ளது. இந்தி பேசுவோரோடு நாங்களும் சமம்தான். இந்தியில் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு உரிமை இருப்பதுபோல், எங்கள் தாய்மொழி தமிழிலும் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு உரிமை இருக்கிறது.

இராசீவ் காந்தியின் கொடுங்கோலாட்சி மறைந்து, தற்போது தேசிய முன்னணி ஆட்சி நடப்பதால், தாங்கள் தங்களின் கீழ்ப்பணியாற்றும் அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் தக்கவாறு அறிவுரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தெலுங்கு பேசும் மக்களின் தன் மானத்திற்குப் போராடும் தெலுங்கு தேசக் கட்சியைச் சேர்ந்தவராகிய தங்கள் துறையில், *'ஆகாஷ்வாணி'*, *'தூரதர்சன்'*, *'பிரசார்பாரதி'*, போன்ற இந்தி, சமற்கிருதச் சொற்கள் அகற்றப் பட்டு, அவரவர் தாய்மொழிப் பெயரில் அழைக்கப் படும்படியாக மாற்றப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தன்னாட்சி (Autonomy) என்ற பெயரில் ஏற்கனவே ஆரியர்களால் நிரப்பப் பட்டுள்ள தங்களின் துறையில் பெரும்பான்மையும், இந்தியாவின் மூலக் குடி மக்கள் ஆன திராவிடர்களின் மொழிகளுக்கு, குறிப்பாகத் தமிழுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட வேண்டும். இந்த வகையில் மொழிவாரி திராவிட அறிஞர்களின் கருத்துகள் கேட்டறியப்பட்டு, அவ்வம் மாநிலத்தில், அவ்வம் மொழியில், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் நடைபெற ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அன்புடன்.
நா. இளமாறன். சென்னை-43.
(அமைச்சருக்கு அனுப்பப்பெற்ற மடலின் படி)

வாழப்பாடியாரை எச்சரிக்கின்றோம்!

தமிழ் நெஞ்சங்களே...! தமிழ் நாட்டிற்கும், தமிழ்மொழிக்கும் தம் வாழ்நாள்களை ஒப்படைத்த சான்றோர்கள் பலராவர். அவர்களுள் தந்தை **பெரியார், அறிஞர் அண்ணா**, தமிழர்களின் தந்தை **மறைமலையடிகளார்**, மொழிஞாயிறு ஞா. **தேவநேயப் பாவாணர்** முதலியோர் குறிப்பிடத் தக்கவர். இவர்கள் சிறந்த தமிழ்த் தொண்டாற்றி உடலால் மாய்ந்து, புகழால் இன்றும் நம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இப்பெரியோர்களின் புகழைப் பரப்பும் வகையில் தமிழகத்தில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் தமிழர் தந்தை மறைமலையடிகளாரின் பெயரில் *'மறைமலைநகர்'* என்று நகர் அமைக்கப் பட்டுள்ளது. அந் நகரின் பெயரை அண்மையில் பேராய (காங்கிரசு)க் கட்சியின் தமிழகத் தலைவர் **வாழப்பாடியார்** அழிக்க முனைந்து வருவது கண்டு உள்ளம் கொதிப்படைகின்றோம். பலவகையிலும் தமிழைத் தாழ்த்தித் தமிழ்மொழியை வீழ்த்த நினைக்கும் பேராயக் கட்சியின் தமிழகத் தலைவரின் இக்குறும்புத் தனத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத் தமிழழிப்புச் செயலைத் தொடர்வாரானால் தமிழகமெங்கும் உள்ள தமிழ் மாணவர்கள் பலவகைப் போராட்டங்களில் ஈடுபடுவர் என்பதைத் தெரிவித்து வாழப்பாடியாரை எச்சரிக்கின்றோம்.

இப்படிக்கு,
தமிழ் மாணவர்கள்,
கா. சா. சு. கலைக்கல்லூரி, திருப்பனந்தாள் (அஞ்)
தஞ்சாவூர் (மாவட்டம்), 612 504.

படிகள்

1. முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசு.
2. சட்டப்பேரவைத் தலைவர், தமிழ்நாடு.
3. கல்வியமைச்சர் அவர்கள், தமிழ்நாடு.
4. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு ஆசிரியர்.
5. ஆசிரியர் அவர்கள், 'தினகரன்' நாளிதழ்.
6. ஆசிரியர் அவர்கள்; 'முரசொலி' நாளிதழ்.
7. ஆசிரியர் அவர்கள், 'தினமணி' நாளிதழ்.
8. உலகத் தமிழ்க் கழகம், குடந்தை.

அப்பாத்துரையார் குடும்பத்திற்கு அன்பளிப்புச் செய்யுங்கள்!

Scanned with CamScanner

பிரபாகரனே! அவன் வீரத்திற்கு ஈடும் இல்லை; இணையும் இல்லை. அவன் அறிவையும், பண்பையும் விட அவன் வீரமும், உறுதியும், தமிழினத்தின் மேல் கொண்ட பற்றும் நாம் பெரிதும் மதிக்கத் தகுந்தவை. எனவே, யாரும் அவனை முனை மழுக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம்! காளைக்குக் கொம்பு சீவுவது போல, அவனை அனைவரும் ஊக்கப் படுத்த வேண்டும். அந்தப் புலி வீரனை யாரும் அரசியல் கூண்டுக்குள் அடைத்து வைக்க விரும்புவது நம் அருந்தமிழின நலத்திற்கு நல்லதில்லை. அவனை வைத்துத்தான் தமிழினம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியும்! அவனைப் பார்த்துப் பொறாமையால் புழுங்கும் வரதராசப் பெருமாள்கள் போலும் அரசியல்காரர்கள் இந்த உண்மையை உணர்ந்து கொள்வது நல்லது. இந்தியப் படையுடன் குடித்துவிட்டுக் கும்மாளம் போட்டு, அறிவற்ற உணர்வில் உளறிக் கொட்டிக் கிளறி மூடுகின்ற வரதராச பெருமாளர்களும், ஈ. பி. ஆர். எல். எப். டெலோ, டெலா, ஈ. என். டி. எப், பிளாட் போலும் விடுதலைப் போராளிப் படை வீரர்களை விட ஆயிரம் மடங்கு உயர்ந்தவன் பிரபாகரன் என்பதை, 1976—இல் நாம் ஈழம் சென்று வந்ததிலிருந்து, இன்று வரை, மிக ஆழமாகவும் அகலமாகவும் தமிழீழ விடுதலையுணர்வுகளையும் போக்குகளையும் மட்டுமன்று, தமிழினத்தின் ஒட்டு மொத்த படிநிலை வளர்ச்சி வரலாறுகளையும் அலசி ஆராய்ந்த பின்னரே சொல்கிறோம்.

எனவே, தமிழீழப் போராளிக் குழுக்களுக்கும் சரி, இங்கு அவர்களிடையே ஓர் ஒப்புரவையும் அமைவான ஓர் உடன்பாட்டையும் ஏற்படுத்த முயன்று வரும், தலைவர்களுக்கும் சரி, குறிப்பாகத் தமிழக முதல்வர் கலைஞருக்கும் சரி, பிரபாகரன் வீரத்தைக் குறைத்து மதிப்பிட்டோ அவன் மேல் குற்றஞ்சாட்டியோ ...

... விட வேண்டாம். பிரபாகரனின் செயல்பாடுகளில் எந்தக் குறைபாடு இருந்தாலும், அவற்றைப் பெரிது படுத்தவே கூடாது. சில நேரங்களில், தமிழினத்தில் சில பேரை, சில தவிர்க்க முடியாத காரணங்களுக்காக அழிக்கின்றதாகக் கூறப் பெறும் முயற்சிகளையும் சேர்த்தே நாம் கூறுகிறோம். பூனைகளும், ஆட்டுக்குட்டிகளும் வேண்டுமானால் செடி கொடிகளுக்குச் சேதம் விளைவிக்காமல், புதரிடுக்குகளிலும், மரம் மட்டைகளிலும் ஒளிந்து நெளிந்து குனிந்து, குறுகிக் கொண்டு செல்லலாம். வீரம் பொதுளிய ஒரு வேழம், களிறு, யானை அவ்வாறு செல்ல முடியாது. அது போகின்ற போக்கில், அதன் காலடிகளில் சிக்கிச் சிதையும் புல், பூண்டுகளும், முட்புதர்களும் இருக்கவே செய்யும். விடுதலை வேழங்களின் கள நடைகளின் வரலாறுகளில் எல்லாம் இது பொது நிகழ்ச்சி.

ஆகையால், எந்த முயற்சியானாலும் பிரபாகரனை முன் வைத்தே அனைத்து முடிவுகளும் இருத்தல் வேண்டும் என்பதைக் கலைஞர் உட்பட அனைவர்க்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். எவரும் தம்மை, தம் நிலையை, தம் பதவி நலன்களை மட்டும் முன் வைத்து முடிவெடுக்கக் கூடாது. இனி, இன்னுஞ் சொன்னால், பாலசிங்கங்களின் முடிவு கூட பிரபாகரனின் முடிவாக இருந்து விடக் கூடாது என்று பிரபாகரனுக்கும் கூட கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

இறுதியாக, இந்நிலையில் இன்னொன்றையும் கூட தலைவன் பிரபாகரனுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறோம். விடுதலை வீரன் பேச்சுகளால் தன்னிறைவு பெறக் கூடாது. பேச்சுகள் விடுதலையை உருவாக்கியதாக வரலாறில்லை. எனவே, பேச்சுரைக்கு இனி அவர் விரலும் நீட்ட வேண்டுவதில்லை.

வேடிக்கையன்று விடுதலை; வீரம் விளைப்பதுவே!

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 52

பொது நிலையில் தன்னை முன்வைப்பதைவிடத் தன் கொள்கையை முன் வைப்பதே, பிற பழிகளுக்கு ஆளாகாமல் காக்கும்

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 135.

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென் -5.

Scanned with CamScanner